DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 178 /2019**

**CNR.No: TNTH06-000289 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Town | ராயப்பன்பட்டி |
| Father's Name | : கோபால் | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் : 03.01.2025

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) வழக்கில் சொல்லப்பட்டுள்ள வட்டக்கோவில் அமைந்துள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 2048 ஆகும். சர்வே எண். 2048 சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்றாலும், அது சுருளியாற்று புறம்போக்கு என வருவாய்துறை ஆவணங்களில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 2048 சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஹெக்டேர் 73 ஏர்ஸ் ஆகும். 1 ஹெக்டேர் 73 ஏர்ஸில் அளவுள்ள மொத்த சொத்தில் நாங்கள் எவ்வளவு நிலத்தில் கட்டுமானம் செய்திருப்பதாக சொல்கிறேன் என்றால் 4 ஏர்ஸ் அளவுள்ள நிலத்தில் கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. 4 ஏர்ஸ அளவுள்ள நிலத்தில் வட்டக்கோவிலுக்கான கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், இனிமேல் தாக்கல் செய்கிறேன்.

2) வழக்கில் சொல்லப்பட்டுள்ள வட்டக்கோவில் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றாலும், அவ்வாறு கட்டியதற்கு முறையாக அனுமதி பெறப்பட்டதா என்றாலும் 2010ம் ஆண்டில் புனரமைப்பு செய்யப்பட்டது, அதற்கு முன்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்த அந்த கோவில் இருந்து வருகிறது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள வட்டக்கோவில் பழமையான கோவில் என நான் கூறுவதை

நிரூபிக்க தொல்லியல் துறையிலிருந்து சான்றிதழ் எதுவும் பெற்று தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம், ஆனால் அது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. வாசாஆ 4 ஆவணத்தில் சர்வே எண். 2048 சொத்தில் 4 ஏர்ஸ் அளவுள்ள நிலத்தில் பூதநாராயணன் திருக்கோவில் ஆதிஅண்ணாமலையார் வட்டத்திருக்கோவில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் இந்த ஆவணம் 2019 ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

3) பூதநாராயணன் திருக்கோவில் என்பதும், ஆதிஅண்ணாமலையார் வட்டத்திருக்கோவில் என்பதும் வேறு வேறு கோவில்கள் என்றால் சரிதான். இந்த இரண்டு கோவில்களுக்கும் இடையே ஆறு செல்கிறது என்றால் சரிதான். இந்த இரண்டு கோவில்களுக்கும் உள்ள இடைவெளி சுமார் 500 மீட்டர் இருக்கும் என்றால் அதற்கும் குறைவாகத்தான் இருக்கும். எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாசாஆ 4 ஆவணத்திலேயே வழக்கு வட்டத்திருக்கோவில் மட்டும் 4 ஏர்ஸ் அளவுள்ள பரப்பில் அமையபெறவில்லை என சொல்லியிருப்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பூதநாராயணன் திருக்கோவிலை வேறு தரப்பினர் நிர்வாகம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். வாசாஆ 6 ஆவணத்தில் சர்வே எண். 2048 சொத்தானது சுருளியாறு புறம்புகள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) வாசாஆ 6 ஆவணத்தில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள வட்டக்கோவிலை நான் நிர்வாகம் செய்து வருவதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் நான் அந்த கோவிலின் நிர்வாகி அல்ல, நான் பூசாரி மட்டுமே ஆவேன். நான் வழக்கு கோவிலில் பூசாரியாக இருந்து வருவதாக கூறுவதை நிரூபிக்க என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவதுபோல கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றாலும், அதுபோன்று பூசாரியாக இருந்து வருவதை குறிப்பிட்டு சான்று வழங்க கிராம நிர்வாக அலுவலர் அதிகாரம் படைத்த அலுவலர் அல்ல என்றாலும் சரியல்ல.

5) பூதநாராயணன் கோவிலுக்கு 50 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அந்த கோவில் நிர்வாகம் வேறு நபர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. வாசாஆ 8 சான்றிதழில் பூதநாராயணன் திருக்கோவிலுக்கும் சேர்த்து வழக்கு ஆதிஅண்ணாமலையார் வட்டத்திருக்கோவிலுக்கும் மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை இல்லை என சான்று வழங்கப்பட்டதற்கு என்ன காரணம் என்றால் இரண்டு கோவிலும் ஒரே சர்வே எண்ணில் அமைந்திருப்பதால் அவ்வாறு வழங்கப்பட்டது. நான் தவறான விபரங்களை வழங்கி மேற்படி ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றால் அது உண்மையல்ல. சர்வே எண். 2048 சொத்தில் தார் சாலை செல்கிறதா என்றால் இல்லை, அங்குள்ள தார் சாலையானது சர்வே எண். 2050/2பி 2சி சொத்தில் தான் அமைந்துள்ளது. சர்வே எண். 2048 ல் சொத்தில் வழக்கு வட்டக்கோவிலானது எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் வடக்கு பக்கமாக வனத்துறை நிலத்தை ஒட்டி அமைந்துள்ளது.

6) வாசாஆ 2, வாசாஆ 3 புல வரைபடங்களில் வழக்கு வட்டக்கோவில் அமைந்திருப்பதாக குறிப்பு எதுவும் உள்ளதா என்றால் ஆமாம், புல வரைபடங்களில் இல்லை, கிராம அடங்கல் கணக்குகளில் தான் அது குறித்த குறிப்புகள் உள்ளது. வழக்கு வட்டக்கோவிலுக்கும், 4ம் பிரதிவாதியின் இடத்திற்கும் எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் இரண்டிற்கும் இடையில் ஒரு அடி இடைவெளி தான் இருக்கும். வட்டக்கோவில் அமைந்துள்ளதாக கூறும் கோவிலுக்கு தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் காலியிடம் மற்றும் சுருளியாறு அமைந்துள்ளது. நான் அரசு புறம்போக்கு நிலத்தில் அனுமதியின்றி வழக்கில் சொல்லப்பட்டுள்ள வட்டக்கோவிலை கட்டியிருக்கிறேன் என்று சொன்னால் அது உண்மையல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் W.P.No.7099/2018 என்ற வழக்கை

தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

7) அந்த நீதிபேராணை மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம், 2019 ம் வருடம் ஜுன் மாதத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, அதில் எனக்கு இரண்டு வாரம் கால அவகாசம் அளித்து ஊரக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு 8 வாரம் கால அவகாசம் வழங்கி எங்கள் தரப்பு ஆவணங்களை சமர்ப்பிக்க வாய்ப்பளித்து உத்தரவிடப்பட்டது. மேற்படி நீதிபேராணை மனு குறித்த விபரங்களை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம், சொல்லவில்லை. மேற்படி நீதிபேராணை மனு தொடர்புடைய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் W.P.No.7099/2018 என்ற நீதிபேராணை மனு குறித்த விபரங்களை இந்த வழக்கில் சொல்லாத காரணத்தினால் இந்த வழக்கில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கத்தில்லை என்றால் சரியல்ல, நான் எதையும் மறைக்கவில்லை.

8) வழக்கு கோவில் ஆற்று புறம்போக்கு நிலத்தில் அமைந்திருப்பதாலும், அச்சொத்துகுறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல, வழக்கு கோவில் ஆற்று புறம்போக்கில் அமைந்திருப்பதாக வருவாய்துறை ஆவணங்களில் தான் உள்ளது, உண்மையில் அது பண்டார துறைக்கு பாத்தியப்பட்டதாக வனத்துறை மற்றும் பத்திர பதிவு அலுவலகங்களில் பதிவாகியுள்ளது. நான் உரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் எனது வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீது இந்த வழக்கு சொத்திற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல. ஆற்று புறம்போக்கு மற்றும் குளத்து புறம்போக்கு உள்ளிட்ட நீர்நிலை புறம்போக்கு சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டிய கடமை அரசு அலுவலருக்கு உள்ளது என்றாலும், அதன்படி எனக்கு அளிக்கப்பட்ட நோட்டீஸ் மற்றும்

நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஓ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.